பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 27 திங்கட்கிழமை 12.08.2024 கதிர் 278

## சஜித், ரணிலுடன் சேர்ந்தோர் அரசியல் விபச்சாரிகள்

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச கடும் காட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும்ரணில்தரப்புடன் இணைந்துள்ளவர்கள் அரசியல் விபச்சாரிகள் என்று விமர்சித்துள்ளார் முன்னாள் நீதி அமைச்சரும் ஜனாதிபதி வேட்பாளருமான விஜயதாச ராஜபக்ச. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு சஜித்துக்கும் ரணிலுக்கும் ஆதரவளிப்போரையே அவர் இவ்வாறு திட்டடித் தீர்த்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வென்னப்புவ பிரதேசத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போதே முன்னாள் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கவேண்டும் என்று கூறிய சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் ☞ 2

## பெரமுனவை இனி யாராலும் கட்டியெழுப்பவே முடியாது

### விமலவீர திஸாநாயக்க திட்டவட்டம்

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவை இனி எவராலும் கட்டியெழுப்ப முடியாது. எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும். ஏனெனில் அவர் வெற்றி பெற்றால் தான் நாடு வெற்றி பெறும் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப் பின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டிருந்த வேளையில் தற்போது வீரவசனம் பேசுபவர்கள் எவரும் ஆளும் தரப்பைப் பொறுப்பேற்கவில்லை. நாடு தீப்பற்றிளிந்துகொண்டிருந்த போது நிபந்தனை விதித்துக் கொண்டிருந்தார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் எதிர்காலத்தை கருத்திற் கொள்ளாமல் நாட்டை பொறுப்பேற்றார்.

குறுகிய காலத்தில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதை அனைவரும்ஏற்றுக்கொள்ள வேண்டும். 2022 ஆம் ஆண்டு வரிசை யுகம் தற்போது காணப்பட்டால் எவரும் தேர்தல் பிரசாரங்களை செய்ய முடியாது என்பதை ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்புக்கு சத்திய சோதனை என்று நான் நேற்றே இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியது வாசகர்களுக்கு நினைவிருக்கும். அந்தச் சத்திய சோதனையின் விரிவாக்கம், விளக்கம்தான் இன்றைக்கு.

ஜனாதிபதியுடன் இன்றைய சந்திப்புக்கு வருமாறு பொதுக் கட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதில் உள்ள தமிழ் மக்கள் பொதுச் சபை பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்புக் கிடைத்திருந்தது.

இது குறித்து சனிக்கிழமை இரவு நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் கூடிய பொதுக்கட்டமைப்பின் தலைமைப்பீட 14 உறுப்பினர்களும் இந்தச் சந்திப்புக்குச் செல்வதில்லை என்று முடிவெடுத்தனர். கட்சிகள் சந்திப்பில் பங்கேற்பதன் சாதகம் பற்றி எடுத்துக்கூறினாலும் அது ஏற்கப்படாமல் தேர்தல் வேலைகள் இருப்பதால் அவசரமாக விடுக்கப்பட்ட இந்த அழைப்பை ஏற்று சந்திப்புக்குச் செல்ல நேரமில்லை என்ற காரணத்தைக் காட்டி அழைப்பை நிராகரிக்கமுடிவெடுக்கப்பட்டது. ☞ 2

## இணைந்த வடக்கு கிழக்கிலே சமஷ்டித் தீர்வு அதுவே தமிழ் அரசின் அரசியல் நிலைப்பாடு

### ஜனாதிபதி வேட்பாளர்களிடம் அதை எடுத்துரைப்பது என்று கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானிப்பு

இணைந்த வடக்கு கிழக்கிலே சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஓர் ஆட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தான் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நிலைப்பாடு. ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிடும் வேட்பாளர்களிடம் இதனை முன்வைப்போம். யாராவது ஏற்றுக் கொள்வார்களாயின் அவர்களை ஆதரிப்போம் என்று வவுனியாவில் நேற்றுக் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

தனியார் விடுதியில் நேற்றுக் காலை10மணியளவில்தொடங்கிய மத்திய செயற்-குழு மாலை 6 மணிவரை கலந்துரையாடியது. கூட்டத்தின் நிறைவில் ☞ 2

## கிராம அலுவலர்கள் இரு நாள் போராட்டம்

கிராம அலுவலர்கள் இன்றும் நாளையும் கடமைகளில் இருந்து விலகிப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நாளை முதல் ஒரு வார காலத்தற்குத் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமது தொழில்சார் நடவடிக்கையால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசசேவையின் ஏனைய சேவைகளுடன் முரண்படாத வகையில் கிராம சேவகர் சேவையில் உள்ள பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பணிப்புரை விடுத்திருந்தார். ☞ 2

## அரியநேந்திரனிடம் விளக்கம் கேட்கிறது தமிழ் அரசுக் கட்சி

தமிழ் அரசுக் கட்சியின் அனுமதியின்றி பிற தரப்புகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநேந்திரனிடம் அது தொடர்பில் விளக்கம் கேட்பது என்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு நேற்றுத் தீர்மானித்தது.

இன்னும் ஒரு வாரத்துக்குள் அரியநேந்திரன் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அதுவரை கட்சியின் எந்த நிகழ்வுக்கும் - எந்தக் கூட்டங்களுக்கும் - அவரை அழைப்பதில்லை என்றும் கட்சி தீர்மானித்திருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் தனியார் விடுதியில் இடம்பெற்றது. காலை 10 மணிக்குத் தொடங்கிய கூட்டம் மாலை 6 மணிவரையில் இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பேச்சாளர் சுமந்திரன், அரியநேந்திரன் மீதான நடவடிக்கை குறித்துத் தெரிவித்தார். அவர் ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்ட காரணங்களுக்காக போட்டியிடுவோரை நிராகரிக்குக

### பவ்ரல் அமைப்புக் கோரிக்கை

ஜனாதிபதி தேர்தலில் தனிப்பட்ட காரணங்களுக்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களை நிராகரிக்கவேண்டும் என்று பவ்ரல் அமைப்பு கேட்டுள்ளது. இது நாட்டின் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தை துஸ்பிரயோகம்செய்யும் நடவடிக்கைஎன்றுபவ்ரல் அமைப்பின் தலைவர் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில்செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வேட்பாளர்களின் எண்ணிக்கைஎதிர்வரும் தினங்களில் மேலும் அதிகரிக்கலாம். இவ்வாறு தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்வருபவர்களில் சிலர் அவர்களின் சொந்த காரணங்களுக்காகவே போட்டயிருகிளார்கள். அவர்களைத் தவிர்க்க வேண்டி இருக்கிறது.

வெளிநாட்டு தூதுவர் சேவைகளுக்கு ☞ 2

## வழக்கை முடிவுக்குக் கொண்டுவர தமிழ் அரசுக் கட்சி பேச ஒரு சேரமுடிவு

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவு ற்றும் நிர்வாகிகள் தெரிவுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் கட்சியின் மத்திய செயற்குழு ஒரு இணக்கத்திற்கு வந்தது.

வவுனயாவில்நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நீண்ட நேர விவாத்தின் பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட்டது. தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் விளக்கத்துக்கு முன்னான கலந்தாய்வு ஒக்டோபர் 14 ஆகும். அந்தக் கலந்தாய்வில் வழக்காளி தரப்போடும் இணங்கித்தீர்வுகாணும் வகையில் கட்சிக்குள் இணக்கமான முடிவு எட்டப்பட்டுள்ளது.

-இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் ☞ 2

## ஜயம்பதியும் சஜித்துக்கு ஆதரவு



பெரிதும் மதிக்கப்படுபவரான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேம தாசவுக்கு தனது ஆதரவு தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலும் அவர் இணைந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இவர், அரசமைப்பு சார் சட்டத்தரணியாக நாட்டிலும் சர்வதேசத்திலும் நன்கறியப்பட்ட ஒருவர்.

## அரசியலுக்குப் பொருத்தமற்றவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

### அலவத்துவல எம்.பி. தெரிவிப்பு

சரத் பொன்சேகா அரசியலுக்கு பொருந்தாதவர். அவர் போரில் ஜெனரல் என்றாலும், அரசியலில் ஒரு கோப்ரல் அளவுக்கும் அவருக்கு அறிவு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சோதனை என்னவென்றால் இந்த முடிவு எடுக்கப்பட்ட மறுநாளான நேற்றுக் கூடிய ரெலோவின் தலைமைப்பீடம் சந்திப்பில் கலந்துகொள்வது என்று தீர்மானித்துள்ளது. ஜனநாயகப் போராளிகள் கட்சியும் சந்திப்புக்குச் செல்வது என்று முடிவெடுத்து அறிவித்துள்ளது. விக்னேஸ்வரன் தான் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்பதால் தனது பிரதிநிதியொருவர் சந்திப்புக்கு வருவார் என்று ஏற்கனவே அறிவித்துள்ளார். புளொட் இதுவரையில் எந்தக் கருத்தையும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை என்றாலும் அதுவும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி கட்சிகள் பொதுக் கட்டமைப்புக்குள் இருந்து புட்டுக் கொண்டு வெளிக்கிட்டால் அது சத்தியசோதனையாகாமல் வேறு என்னவாக இருக்கமுடியும். பொதுக் கட்டமைப்புக்குள் இருந்தபடி ஜனாதிபதியின் சந்திப்புக்கு கட்சிகள் சென்றால் அந்தக் கட்சிகளை வெளியேற்றிவிடுவோம் என்று பொதுச்சபையைச் சேர்ந்த சிலர் வீர வசனம்எல்லாம்பேசியி-ருக்கிறார்கள். ஆனால், தொடக்கத்திலிருந்தே சொன்னதனையும்பேணமுடியாது வளைந்துவளைந்துகொடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் பொதுச்சபையினர் இந்தவிடயத்தில் மட்டும் நிமிர்ந்து நிற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இவர்களை விட்டால் அவர்களும் இவர்களுக்கும் ஆள்கள் இல்லாத நிலையில் வீரவசனங்கள் எல்லாம் செல்லாக்காசுதான்.

..................

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருடனான ஜனாதிபதியின் இன்றைய சந்திப்பு உறுதியானதா என்பது தொடர்பில் ஒரு கேள்விக்குற இருந்து வரும் நிலையில் நாளை மறுதினம் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. சந்திக்கவுள்ளார் என்று அறிய முடிகின்றது. இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதியினால் செவ்வாய்க்கிழமை நேரம் கேட்கப்பட்டது என்றாலும் சுமந்திரனுக்கு அன்றைய தினம் நேரமின்மை காரணமாக புதன் கிழமை சந்திக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்-டுள்ளது. எனினும் சந்திப்புக்கான நேரம் மற்றும் இடம் என்பன இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் நிலையை எட்டியிருக்கும் இந்தவேளையில் இந்தச் சந்திப்பு எப்படியும் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

..................................

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு அரியநேந்திரனிடம் விளக்கம் கேட்பதுஎன்றுநேற்றையகூட்டத்தில் தீர்மானித்தது. அவர் மீது கட்சி நடவடிக்கைஎடுப்பதற்கானமுதல்படி இது. அவரைக் கட்சியைவிட்டுத் தூக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எதுவும் பாயாததற்கு, அவர் இன்னும் வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை செலுத்தாததும் ஒரு காரணம் என்று தெரிகிறது.

பொது வேட்பாளராக அரியநேந்திரன்தெரிவுசெய்யப்பட்ட ஓரிரு தினங்களுக்குள்ளேயே கட்டுப்பணம் செலுத்தப்படும் என்று பொதுக் கட்டமைப்பினர் தெரிவித்திருந்தார்கள். ஆனால், இதுவரை செலுத்தப்படவில்லை. நாளைமறுதினமே கட்டுப்பணம் செலுத்துவதற்கான கடைசித் தினம். இன்று அல்லது நாளை அவர் கட்டுப்பணம் செலுத்தியாகவேண்டும். அதற்கிடையில் பொதுக் கட்டமைப்பே இருக்குமா சிதறுமா என்கிற நிலையை எட்டடியிருப்பதால் கட்டுக்காசாவது மிச்சம் என்கிற வகையில் கடைசி வரை காத்திருப்பார்கள் என்றேபடுகிறது.

எண்ணித்துணிக, துணிந்தபின் எண்ணுவதென்ப இழுக்கு என்றார் வள்ளுவர். பேராசிரியர்கள், ஆய்ந்து கட்டுரை எழுதுபவர்கள் எல்லோரும் சேர்ந்து என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இணைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர் மாவை. சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் இணைந்து செய்தியாளர்களிடம் பேசினர். கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் அங்கு தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினோம். இதிலே பிரதான வேட்பாளர்களாக இன்று கருதப்படுகின்ற மூவரில் இருவரான சஜித்பிரேமதாஸமற்றும்அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் தமிழரசுக் கட்சியின்தலைமைப்பணிமனைக்கு வந்து எமது தலைவர்களோடு பேச்சு நடாத்தியுள்ளனர். அந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் உடனேயே ஊடகங்களிற்கும் கருத்துக் கூறினர்.

இதேநேரம் சுயேச்சை வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராஜாவை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது ஓர் பத்திரத்தையும் கையளித்துள்ளார்.

கட்சியில் பெரும்பான்மையானோரின் நிலைப்பாடு, வேட்பாளர்கள் மூவரும் இதுவரையில் முன்வைத்த விடயங்கள் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை எட்டுவனவாக இல்லை என்பதாகும். இதனை நாம் அவர்களுக்கும் சொல்லியிருக்கின்றோம்.

இதேநேரம் நேற்றுமுன்தினம் நாமல் ராஜபக்ச எனது வீட்டிற்கு வந்து எமது கட்சியுடன் பேச வேண்டும் எனக் கோரினார். அதனையும் ஆராய்ந்து சந்திக்க வேண்டுமானால் சந்திப்போம். எவரைச் சந்திக்கவும் நாம் பின்நிற்கவில்லை. தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை அவர்களிடம் வெளிப்படையாகவே கூறுவோம்.

இது தொடர்பில் இன்று (நேற்று) எடுத்த முடிவும் அப்படியாகவே இருக்கின்றது. அனைத்துவேட்பாளர்களிற்கும் நாம் பகிரங்கமாக கூறுவது தமிழ் மக்கள் சார்பில் - தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வடக்கு கிழக்கிலே சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனானஓர்ஆட்சிமுறைஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான். இது எமது அரசியல் நிலைப்பாடாகும்.

எம்மிடம் பேச வருகின்ற அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் இதனை நாம் கூறுகின்றோம். இதற்கு யாராவது இணங்கிவந்தால்ஆதரவளிக்கலாம் எனவும்கூட்டத்திலேசொல்லப்பட்டது. எனினும்இதுதொடர்பாகத்தீர்மானம் ஒன்றும் எடுக்கவில்லை - என்றார்.

## அரியநேந்திரனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்ப் பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவது என்று சில அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சிலரும் அறிவித்திருக்கின்ற நிலையில் இது இன்றைய (நேற்று) கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டது. இதற்கு முனபும் இது தொடர்பில் இருதடவை பேசியுள்ளோம். கடந்த கூட்டத்திலே அரியநேந்திரனும் இருந்தார். அப்போது இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை எனச் சொல்லியிருந்தோம். இப்போது இவ்விடயம் தொடர்பிலே எமது கட்சியின் உறுப்பினர்களோடும், மக்களோடும் தொடர்ந்து கலந்துரையாடுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. பொது வேட்பாளருக்கு ஆதரவா அல்லது எதிர்ப்பா என்பது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

ஆனால், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல் குழு உறுப்பினரான அரியநேந்திரன் கட்சியை கலந்து ஆலோசிக்காமல் தன்னை வேடபாளராக இதர கட்சிகளோடும் பொது அமைப்புக்களோடும் சேர்ந்து அறவித்தமை தொடரபாக அவரிடம் விளக்கம் கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது விளக்கத்தை கட்சிக்கு வழங்க ஒரு வார கால அவகாசமும் வழங்கப்படுகின்றது. அதுவரைக்கும் கட்சி நிகழ்வுகளிற்கு அவருக்கு அழைப்பு விடுப்பதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. - என்றார்.

## கிராம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் கிராம சேவகர்களின் சம்பள முரண்பாடு, பதவியுயர்வு, சேவை யாப்பு தொடர்பான பிரச்சினைகள் தற்போது தொடர்ந்தே வண்ணமே இருக்கின்றன எனக் கிராம சேவை உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்தது. இதற்குஎதிர்ப்பும் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

## தனிப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்கு அல்லது வெற்றிபெறும் வேட்பாளரிடமிருந்து அரச திணைக்களங்களின் தலைவர் பதவிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில், பிரபல்லியமடையும் நோக்கில், சுதந்திர ஊடக சந்தர்ப்பத்தை பெறுக்கொள்ளும் நோக்கில் அல்லது வாக்கு சாவடிகளில்தங்களின்பிரதிநிதிகளை நியமித்துக்கொள்வதற்கு போன்ற இவ்வாறு தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கம் அல்லாத வேறு காரணங்களுக்காக வேட்பாளர்களாக முன்வருகின்றனர்.

2010 ஜனாதிபதி தேர்தலில் 35 பேர் வேட்பாளர்களாக களமிறங்கி இருந்தனர். இவர்களில் 33 பேரும் இணைந்து 2.5 வீத வாக்குகளையே பெற்றிருந்தனர். அதனால் வரலாறு முழுவதும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தால், பிரதான வேட்பாளர்களைத்தவிர ஏனையவர்களுக்குநூற்றுக்கு2வீத வாக்குகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாமல்போயிருக்கிறது. இவர்கள் அனைவரதும் கட்டுப்பணம் அரசுடைமையாகிறது.

அதேநேரம் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் வாக்குச்சீட்டின் அளவு அதிகரிக்கிறது. அதன் காரணமாக தேர்தல் செலவும் அதிகரிக்கிறது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தும் இறுதிநாள் எதிர்வரும் 14ஆம் திகதியாகும். இதுவரை 27 பேர் கட்டுப்பணம் செலுத்தி இருக்கின்றனர் என்றார்.

## அரசியலுக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித்பிரேமதாசவின்வெற்றிக்காக அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளும் தலைவர்களும் கைகோர்த்து வருகின்றனர். இது ஒரு வரலாற்றுத் தருணம்.

எதிர்காலத்தில் நாட்டில் உள்ள அனைத்து இனங்களை யும் மதங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனாதிபதியே நியமிக்கப்படுவார்.

இவ்வாறானதொரு ஜனாதிபதி நாட்டில்நியமிக்கப்பட்டால்மாத்திரமே நாட்டில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் தீர்வுகளை வழங்க முடியும்.

சஜித் பிரேமதாச நாட்டின் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி நாட்டின் அனைத்து மதங்களையும் இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு சந்தர்ப்பம்கிடைக்கவுள்ளதுஎன்றார்.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாய்ந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை யாருக்கும் காட்டிக் கொடுக்கப் போவதில்லைஎனஅண்மைக்காலம் வரை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறிஜயசேகரமற்றும்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால ஆகியோரும் இன்று கட்சி மாறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விபசசாரி போன்று விற்பனை செய்ய சிலர் தயாராகவுள்ளனர். ஆனால், ஸ்ரீலங்கா கட்சி விபசாரி அல்ல. அரசியல் விபசாரிகளே ரணில்மற்றும்சஜித்அணிகளுக்குள் இணைந்துள்ளனர் என்றார்.

## இலங்கையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவில் கொள்ள வேண்டும்.

பொதுஜன பெரமுன வெற்றிப் பெற்றால் மகிழ்ச்சியடைவேன்.ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியமற்றது. பொதுஜன பெரமுனவை இனி எவராலும் கட்டியெழுப்ப முடியாது.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிப் பெற வேண்டும்.அவர் வெற்றிப் பெற்றால் தான் நாடு வெற்றி பெறும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கான உறுதியான கட்டமைப்பு தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பை மாற்றியமைத்தால் தண்டவாளத்தில் இருந்து விலகிய புகையிரதத்தை போன்று நாடு பாதிக்கப்படும்.சஜித் பிரேமதாச அல்லது அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதைய பொருளாதார கட்டமைப்பை தொடர வேண்டும் என்றார்.

## வழக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சிக்குஎதிராகதிருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்ற வழக்கு சம்பந்தமாக நீண்ட நேரம் ஆராய்ந்து இதனை விரைவில் முடிவுறுத்த இருக்கும் உபாயம் தொடர்பில் பேசினோம். ஏற்கனவே மத்தியகுழு, அரசியல் குழுஎன்பவற்றுடன்சட்டத்தரணிகள் மட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன்அடிப்படையில்வழக்காளி கோரிய பிரதான நிவாரணங்களை வழங்குவதென்று மாவட்ட நீதிமன்றிலும் கூறிவிட்டோம். பொதுக் குழுவின் சேர்மானம் எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்து இப்போது ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. அதில் அம்பாறையில் 3 அல்லது 4 தொகுதி என்பது இறுதி செய்யப்படவேண்டியிருக்கிறது. அதனடிப்படையில் பொதுக் குழுவிற்கு 156 அல்லது 161 பேரை உறுப்பினராக அழைப்பது என யாப்பின் அடிப்படையில் இணங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையிலான பொதுச் சபையை கூட்டி, சில முன்னெடுப்புக்களைமேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். ஒக்டோபர் 14 இல் - விளக்கத்திற்கு முன்னரான கலந்தாய்வு இடம்பெறும் போது, அதிலே வழக்காளி தரப்போடும் இணங்கித் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது ஏற்பட்டிருக்கின்றன - - என்றார் அவர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# சட்டமா அதிபருக்கப்பால் சுயாதீன சட்டவாதியை நியமிப்பது ஆட்சி நிர்வாகப் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த உதவும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

பொறுப்புக்கூறல் சார்ந்த செயற்பாடுகளை அரசாங்கத்தின் ஓரங்கமாகவுள்ள சட்டமா அதிபரிடம் கையளிப்பதைவிட, சுயாதீன சட்டவாதி ஒருவரை நியமிப்பதானது ஆட்சி நிர்வாகத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் மிகமுக்கிய நகர்வாக அமையும் என மனித உரிகைள் கண்காணிப்பகத்தின் ஆசியப்பிராந்திய பிரதிப்பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பில் உள்நாட்டு சஞ்சிகையொன்றின் கட்டுரையில் மீனாக்ஷி கங்குலி மேலும் கூறியிருப்பதாவது -

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன்பின்னர் இராணுவத்தினரால் இழைக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க்குற்றங்கள் குறித்து அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக் கானோருக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதை முன்னிறுத்தி விசாரணைகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தொடர்ச்சியாகக் காலந்தாழ்த்தி வந்திருக்கிறது.

நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ் சாட்டப்பட்ட சிலர் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். இவ்வாறு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் நிலவிய குறைபாடு ஆட்சி நிர்வாகத்தின் சகல பகுதிகளுக்கும் வியாபித்தது. வன்முறைப்போக்கு, ஊழல் மோசடிகள் மற்றும் நிர்வாகத்திறனின்மை என்பன அரச வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், தீவிர பொருளாதார நெருக்கடிக்கும் தோற்றுவாயாக அமைந்தது.

மனித உரிமை மீறல் சம்பவங்களில் அரசியல்வாதிகளோ அல்லது பாதுகாப் புத்தரப்பினரோ தொடர்புபட்டிருப்பதாகக் கண்டறியப்படும் வேளையில், அதுகுறித்த சுயாதீன விசாரணைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே நாட்டின் நீதித்துறையில் நிலவும் அரசியல் தலையீடுகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொறுப்புக்கூறல்சார்ந்தசெயற்பாடுகளைஅரசாங்கத்தின்ஓரங் கமாகவுள்ள சட்டமா அதிபரிடம் கையளிப்பதைவிட, சுயாதீன சட்டவாதிஒருவரைநியமிப்பதானதுஆட்சிநிர்வாகத்தின்பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதில் மிகமுக்கிய நகர்வாக அமையும்.

அதேபோன்று அரசியல்வாதிகள் எதேச்சதிகாரிகளாக மாறுகையில், அவர்கள் தமது ஊழல் மோசடிகள் மற்றும் குற்றங்களை மறைத்து, தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏதுவாக ஏனைய கட்டமைப்புக்களை ‘வளைத்து’ விடுவார்கள். எனவே முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்து வலுப்படுத்துவதற்கு, அதற்குரிய அரசியல் தன்முனைப்பு இன்றியமையாததாகும். குறிப்பாக அண்மையில் கொண்டுவரப்பட்ட ஊழல் எதிர்ப்புச்சட்டம் எழுத்துவடிவில் மிகச்சிறந்ததாக இருப்பினும், உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதனை உரியவாறு நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும்.




மேலும் அரசாங்கத்தைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கு சிவில்சமூகங்கள் முயற்சித்த மிகநீண்ட வரலாறு இலங்கைக்கு உண்டு. அவ்வாறிருக்கையில் தற்போது அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் முன்மொழியப்பட்டிருக்கும் சட்டமூலம் சிவில் சமூகங்களின் நிலைத்திருப்புக்கு அச்சுறுத் தலைத்தோற்றுவித்துள்ளன. இவ்வாறானதொருபின்னணியில் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தையும், ஆர்ப்பாட் டங்களையும் ஒடுக்குவதற்குப்பதிலாக, நாட்டுமக்கள் அனைவரி னதும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என அவர் வலியுறுத் தியுள்ளார். (05)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் உலருணவுப் பொதிகள் வழங்கல்



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் உடுவில் கந்தரோடை பகுதியில் மிகவும் வறியநிலையில் உள்ள 25 குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் - மொத்தம் ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கிவைக்கப்பட்டன.

உடுவில் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி லயன் பத்மதேவ மலர் மரியதாஸ் தலைமையில் முன்னிட்டு வழங்கிவைத்தார். இதற்கான ஒழுங்கமைப்பை இலண்டன் வாழ் சேமசுந்தரம் இந்திரகுமார் மேற்கொண்டிருந்தார். அவரும் நிகழ்வில் நேரில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த தலைவர் லயன் தே.அகிலன், செயலாளர் லயன் சி.ஹரிகரன், சேவைத்திட்டப் பணிப்பாளர் லயன் ம.பிரிதுவிராஜா மற்றும் நிர்வாக உறுப்பினர்களான லயன் பா.மரியதாஸ், லயன் க.டினேஸ்,



நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அனுசரணையாளராக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இராஜரட்ணம் ஜோகேந்திரன், தனது பாரியாரின் சிரார்;த்ததினத்தை லயன் வசிகரன் மற்றும் கலாசார மத்தியநிலைய உத்தியோகத்தர் ஜசிதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# மாணவனை தாக்கிய போக்குவரத்து பொலிஸார் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

பயாகல பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளின் குழுவினர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றமைக்காக 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரை கொடூரமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மாணவன் கடந்த 7 ஆம் திகதி தனது தந்தையின் மோட்டார் சைக்கிளில் அருகில் உள்ள கடையொன்றுக்கு சென்றுள்ளார் எனவும், இதன்போது அவரது நண்பர் தலைக்கவசம் அணியாமல் இருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து, பயாகல பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் இருவரை துரத்திச் சென்று, மோட்டார் சைக்கிளை நிறுத்தி அவர்களை தாக்கியுள்ளனர்.

அவர்களை துரத்திச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்த மாணவனின் காதில் தாக்கியதாகவும், மோட்டார் சைக்கிளைஓட்டிச்சென்றபாடசாலை மாணவனை பல தடவை கடுமையாக தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பாடசாலை மாணவன் சிகிச்சைக்காக களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பயாகல பொலிஸ் நிலைய பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (05)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் நியமனத்தால் தமிழர்கள் அந்நியப்ப டுத்தப்படுகின்றனர்

## கலாநிதி நாலக்க கொடஹேவா சுட்டிக்காட்டு

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவதானது தமிழர்களை அந்நியப்படுத்தும் ஒரு செயற்பாடு என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்துள்ளார்.

தமிழ் பொதுவேட்பாளர் சம்பந்தமாக தன்னுடைய கருத்துக்களைப்பகிர்ந்துகொண்டபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் - ஜனாதிபதித் தேர்தல் என்பது முழு இலங்கைக்குமானதாகும். அதில்தமிழ்மக்கள்பங்காளிகளாக இருக்க வேண்டும். அதுதான் ஜனநாயக ரீதியான மரபாகும். ஆனால், தற்போது தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். அந்த முயற்சியானது நடைமுறைக்குசாத்தியமற்றதாகும்.

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஊடாக தமிழ் மக்கள் தமது ஆட்சியின் தலைமையை தெரிவு செய்யும் வாய்ப்பினை பெறமுடியாதவர்களாக உள்ளனர். இது அவர்களின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

என்னைப் பொறுத்தவரையில், தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவது அந்த மக்களின் இறைமையாக இருந்தாலும் அந்த விடயம் தமிழ்மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டியதாக அமைய வேண்டும்.

தற்போதைய நிலையில் தென்னிலங்கையில் மூன்றுக்கும் அதிகமான போட்டிகள் அதிகரித்துள்ளநிலையில் தேசியகட்சியுடன் பேரம்பேசல்களை செய்வதன் ஊடாகவே தங்களது உரிமைகளை நோக்கி நகரலாம். - என்றார். (05)

# தேர்தல் ஆணைக்குழு இணையத்தளம் போன்று போலியான இணையத்தளம்

## விசாரணைகள் ஆரம்பம்

இலங்கையின் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம்போன்றபோலியான இணையத்தளம் ஒன்று இயங்குவது குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

போலி இணையத்தளம் பொதுமக்களின்தகவல்களைதிரட்டி வருகின்றது எனத் தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சைபர்குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவினரை கேட்டுக்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இலங்கையின் கணிணி அவசர தயார்நிலை பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் இந்த போலி இணையத்தளம் அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட கூகுள்சேவையிலிருந்துஇயக்கப்படுகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை சேர்ட் அந்த இணையத்தளத்தை கண்டுபிடித்தது, அந்த இணையத்தளம் ஏனைய இணையத்தளங்கள் போலசெயற்படுகின்றது தேர்தல்கள் ஆணைக்குழு வேலைக்காக ஆள்களைத் திரட்டுகின்றது என்ற செய்தியை வட்ஸ்அப் ஊடாக பொதுமக்களிற்கு அனுப்புகின்றது.

பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களைஅந்தஇணையத்தளம் சேகரிக்கின்றது.(05)

# மீன்பிடி படகு மூலம் களவாக நுழைந்த இலங்கையர் கைது

இந்திய மீன்பிடி படகு மூலம் வென்னப்புவ கடற்கரைக்கு சட்டவிரோதமாக வருகைதந்த இலங்கையை சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படை மற்றும் பொலிஸார் ஒருங்கிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் 2021 ஆம் ஆண்டு இந்தியாவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிதறுண்டு கிடக்கும் தமிழ் வாக்குகள்

இலங்கை அரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்புக்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே இருக்கின்றன. ஆவணி 15 பகல் வேட்புமனுக்கள் ஏற்கப்படும். வெள்ளிக்கிழமை வரையில்27பேர்வேட்புமனுத்தாக்கல்செய்வதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். இன்னும் பலரும் இன்றும் நாளையும் கட்டுப்பணம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களில் மூன்று பேர் மட்டுமே இந்தப் போட்டியில் வாக்காளர்களால் முக்கியமானவர்களாகப் பார்க்கப்படுகின்றார்கள். ஏனையவர்களில் பலரும் தமது சொந்தத் தேவைகளுக்காக வேட்பாளர்களாக நிற்கின்றார்கள் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' சுட்டிக்காட்டியுள்ளது. தனிப்பட்ட காரணங்களுக்கா மட்டுமல்ல முதன்மைப் போட்டியாளர்களால்வாக்குகளைப்பிரிப்பதற்காகவும் பலர்வேட்பாளர்களாகநிறுத்தப்படுகின்றனர்என்பதும் கவனத்திக்கொள்ளப்படவேண்டிய முக்கிய அம்சம்.

எப்படியிருப்பினும் இந்தத் தேர்தலை எதிர்கொள்வதில் தமிழர் தரப்பு ஒருமித்த ஒரு முடிவை எடுக்க முடியாத அல்லது குழப்பகரமான நிலைக்குள் இப்போது வரை இருப்பது தெரிகின்றது. இந்தத் தேர்தலில்தமிழர்களின்வாக்குகள்இதுவரையில்லாத அளவிற்கு ஒரு தீர்மானகரமான சக்தியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டாலும், அதனைத் திரட்சியாக்கி ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் தமிழ் இனம் இல்லை என்பது கவலைக்குரியது. ஏற்கனவே மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினர் சஜித் பிரேமதாசவிற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துவிட்டனர். முஸ்லிம்களிலும் பெரும் பகுதியினர் சஜித்திற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துவிட்டனர்.ஈழத்தமிழர்களில்ஒருபகுதியினர் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துவிட்டனர். இருந்தாலும் பெரும்பாலான ஈழத் தமிழர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய கட்சியான தமிழ் அரசுக் கட்சி இன்னும் ஒரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை.

மறுபுறத்தில் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்கிற குரலுடன் வந்த தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பும் இப்போது ஆட்டங் கண்டு நிற்கின்றது. அரசுத்தலைவர்தேர்தல்வரைக்கும்கூட அது தாக்குப்பிடிக்குமா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. தமிழரின் திரட்சியை இந்த அரசுத் தலைவர் தேர்தலைக் கையாள்வதன் மூலம் வெளிப்படுத்துதல் என்கிற முழக்கத்துடன் வந்தவர்களால்அதனைவெற்றிகரமாகநிறைவேற்ற முடியுமா என்கிற கேள்வி எழுந்து நிற்கின்றது. இன்னொரு புறத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிப்பது என்கிற முடிவோடு இருக்கின்றது. ஆக மொத்தத்தில் மிக முக்கிய தருணத்தில், காத்திரமான முடிவை நிர்ணயிக்கின்ற நேரத்தில் தமிழர் வாக்குகள் சிதறுண்டு போய்க் கிடக்கின்றமை கண்கூடு. அரசுத் தலைவர் தேர்தலுக்கு நெருக்கமாகவாவது இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு தமிழர் வாக்குகளின் திரட்சி சாத்தியப்படுமா?

## வங்கம் விடுதலைக்குக் கொடுத்த விலையும் சிதைக்கப்படும் முஜிபூர் ரஹ்மான் தியாகமும்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

மேலும், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவோம். கடினமான சூழலில்



பங்களாதேஷில் ஏற்பட்ட வேலையின்மை அதிகரிப்பு, இராணுவ குடும்பங்களுக்கு மாத்திரம் 90 சதவீதமான ஒதுக்கீடுகள் உள்ளிட்ட காரணமாக மாணவர்கள் மற்றும் படித்த பட்டதாரிகளால் போராட்டம் பாரியளவில் வெடித்தது.

வங்கதேச சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வரும் முப்பது சதவீத இடஒதுக்கீட்டு முறைக்கு எதிராக 2024 ஜூலை இறுதியில் பெரும் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் உருவாக்கப்பட்ட கலவரத்தில் கிட்டத்தட்ட முந்நூறுபேர் கொல்லப்பட்டனர்.

அதன் விளைவே, ஆட்சிக் கவிழ்ப்பும் வன்முறைகளும் தொடர்கின்றன. அத்துடன் வங்க தேசத்தின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்த தந்தை முஜிபூர் ரஹ்மானின் சிலைக்கு நேர்ந்த நிலையை இன்று சமூக ஊடகங்களில் பார்க்க கூடியதாக உள்ளது.

### சிலைக்கு நேர்ந்த நிலை :

ஷேக்ஹசீனாவின்தந்தைஷேக்முஜிபுர்ரஹ்மான் தான் பங்களாதேஷ் நாட்டை உருவாக்கியவர். வங்கதேச விடுதலைக்கு காரணமான தேசத் தந்தை எனப் போற்றப்பட்டவர். ஆனால், வங்கதேசம் விடுதலையான சில ஆண்டுகளிலேயே முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தினரும் சொந்த நாட்டு இராணுவத்தினராலேயே படுகொலை செய்யப்பட்டனர்.



அப்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் வெளிநாட்டில் இருந்ததால் உயிர் தப்பினர். தற்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் சொந்த நாட்டு மக்களின் புரட்சியால் நாட்டை விட்டே தப்பி ஓடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது பங்களாதேஷில் இராணுவ ஆட்சி என தளபதி வாக்கர் உஸ்-ஜமான் அறிவித்துள்ளார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில், தலைநகரான டாக்காவை விட்டு வெளியேறி உள்ளார். இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

பங்களாதேஷில் அனைத்து பாடசாலை, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளநிலையில், சமூகவலைதளங்களும்முடக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, அந்நாட்டில் இடைக்கால அரசை இராணுவம் அமைப்பதாக இராணுவ தளபதி வக்கார் உஸ்-ஜமான் அறிவித் துள்ளார்.

பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார். பங்களாதேஷைவிட்டுவெளியேறிய ஷேக் ஹசீனாவும் அவரது சகோதரியும் இந்தியாவின் திரிபுரா மாநிலம் அகர்தலாவில் தஞ்சமடைந்திருப்பதாக அசல் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இது தொடர்பில் அந்நாட்டு மத்திய அரசு எந்தவிதமான உத்தியோகபூர்வ தகவலையும் வெளியிடவில்லை.

### அடிப்படை மதவாத பின்னணி:

ஆயினும் மாணவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டு முறையில் மாற்றத்தை கொண்டு வந்தது. 93 சதவீத இடங்கள் திறமையின் அடிப் படையில் நிரப்பப்படும் எனவும் அறிவித்தது.

உச்சநீதிமன்ற அறிவிப்பு வந்து இரு வாரங்களில் ஓகஸ்ட் நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீண்டும் போராட்டம் வெடித்தது.

இந்தக் கலவரம் உண்மையில் மாணவர்களால் நடத்தப் படவில்லை. நாட்டில் உள்ள மதவாதிகளால் தூண்டிவிடப்பட்டுள்ளது. மாணவர்கள் நடத்திய நியாயமான போராட்டங்களில், தடை செய்யப்பட்ட ஜமாத்-இ-இஸ்லாமி போன்ற குழுக்களுடன் பேகம் கலிதா ஜியாவின் வங்கதேச தேசிய கட்சி (பி.என்.பி) உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தக் கலவரத்தை உருவாக்கியுள்ளன.

இந்நிலையில் வங்கதேச தொழிலாளர் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் வன்முறையாளர்களுக்கு எதிராக கண்டனங்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வங்கதேச அரசை அந்நாட்டு இராணுவம் பொறுப்பேற்றுள்ளதுடன், இடைக்கால அரசாக இராணுவம் செயற்படும் என்றும் புதிய அரசை அமைக்க இராணுவம் உதவும் எனவும் இராணுவத் தளபதி வாக்கர் உஸ் ஜமான் தெரிவித்துள்ளார்.

### வங்கம் விடுதலைக்கு கொடுத்த விலை:

வங்கதேசம் பெருமைகளுடன் திகழும் இந்த மக்களாட்சி நாடு, தற்போது பற்றி எரிந்து வருகிறது. இயற்கையின் பெரும் வளங்களையும் வீர தீரம் மிக்க வரலாறையும் தன்னகத்தே கொண்டுள்ள தெற்காசிய நாடு.

தற்போது வங்கதேசம் வன்முறைகளால் பற்றி எரிந்துள்ளது. இதற்கு காரணம் மாணவர் உரிமைப் போராட்டமே ஆகும். மாணவர் போராட்டத்தால் வெடித்த தாக்குதலும், இதைத் தொடர்ந்த வன்மு றையுமே முக்கிய காரணமாகும்.

1971 இல் இனி கிழக்கு பாகிஸ்தான் அல்ல, சுதந்திர வங்கதேசம் என இன்றைய பங்களாதேஷ் விடுதலை அடைந்தது. இந்திய வரைபடத்தில் பார்த்தால், இந்தியாவுடன் சேர்ந்தே இருக்கும் ஒரு மாநிலம் போலவே தெரியும். மேற்கு வங்கம் என்ற மாநிலத்தின் பெயரே, வங்கப் பிரிவினையின் பின்னர் பங்களாதேஷ் விடுதலை பெற்றது வரலாறு.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கொழும்பு துறைமுகத்தில் பெரியளவில் தீ விபத்து

## சரக்கு கப்பல் சேதம்

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சரக்கு கப்பலில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை தீ பரவல் மற்றும் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

துறைமுக தீயணைப்புப் பிரிவு உட்பட துறைமுக ஊழியர்கள் தீயை அணைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தீயை அணைக்காமல் இருந்திருந்தால் பாரிய அழிவு ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், தீயால் கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் மதிப்பிடப்படவில்லை எனவும், தீ விபத்தால் பொருளகள் மற்றும் கப்பலுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது.

# ஆயுதங்களுடன் 7 பேர் இராஜகிரியவில் கைது



இராஜகிரிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன் 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறைக்காவலர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களிடமிருந்து ரி - 56 துப்பாக்கி, மைக்ரோ ரக துப்பாக்கி, 300 ரி 56 ரக துப்பாக்கிகள் மற்றும் 509 எம்எம் தோட்டாக்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.(05)

# வங்கம் விடுதலைக்குக் கொடுத்த விலையும் சிதைக்கப்படும் முஜிபூர் ரஹ்மான் தியாகமும்

4ம் பக்க தொடர்ச்சி...........

இந்தப் போராட்டத்தை ஆதரித்தது இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு. விடுதலைப் போருக்காக படைகளை அனுப்பியது. 1971 டிசெம்பர் 16 இல் இந்தியா மற்றும் முக்தி-பாஹினி கூட்டுப்படைகளின் முன்பு சரணடைந்தார் பாகிஸ்தான் இராணுவ ஜெனரல். இந்தப் போரின் முடிவு, வங்க தேசம் என்ற புதிய தேசம் உருவாக வழிவகுத்தது.



இந்தப் போரில் 5 லட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டது. ஏராளமானோர் காணாமல் போயினர். விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தோரின் தியாகத்தைப் போற்றும் விதமாக, அவர்களின் சந்ததிகளுக்கு வேலைவாய்ப்பில் 30 வீத இடஒதுக்கீடு வழங்கியது வங்கதேசம் அரசு. பின்னர் 2018 இல் வெடித்த மாணவர்கள் புரட்சியின் காரணமாக, இந்த இட ஒதுக்கீட்டு முறை ரத்து செய்யப்பட்டது.


**வங்கப் பிரிவினையின் பின்னரான புதிய புரட்சி :**

நாட்டுக்காக தியாகித்தவர்களை கௌரவிக்கும் வண்ணமே இந்த இட ஒதுக்கீடுகள் அறிமுகப்படுத் தப்பட்டன. ஆனால் இதன் விளைவாக மாணவர்களின் போராட்டங்களால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வங்கப் பிரிவினையின் பின்னரான புதிய புரட்சி போல தற்போது நிகழ்ந்துள்ளமை வரலாற் றின் புரட்சியல்ல, வெறும் பிறழ்ச்சியாகவே தென்படு கிறது. வங்க தேச தந்தை முஜிபூர் ரகுமானின் சிலைக்கு நேர்ந்த நிலையை பார்க்கையில் இந்த போராட்டங்களின் பின்னணியில் பாரிய வெளிநாட்டு சக்திகளின் கைங்கர்யமோ எனவும் ஐயப்பட வேண்டியுள்ளது.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கார் தீயில் எரிந்து நாசம்

பெலியத்த குடாஹில்ல ஜய மாவத்தையில் ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் ஒருவரின் கார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலைதீயில்எரிந்துநாசமானதாக பெலியத்தபொலிஸார்தெரிவித்தனர்.

இந்த அதிகாரியின் வீட்டின் கெரேஜில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் தீப்பிடித்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தீவிபத்தில்கார்முற்றிலும்எரிந்து நாசமாகியுள்ள நிலையில், காருக்கு யாராவது தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(05)

# பிபில - மஹியங்கனை வீதியில் முதியவரின் சடலம் கண்டெடுப்பு

பிபில - மஹியங்கனை பிரதான வீதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் ஊரணிய 12ஆம் கட்டையை சேர்ந்த 60 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு அப்பகுதியில் உள்ள மரண வீடொன்றில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறி, ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கும் பொலிஸார், சடலமாக மீட்கப்பட்ட நபர் மரண வீட்டில் ஏற்பட்ட கைகலப்பில் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளில் ரிதிமாலியத்த பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# யுக்திய நடவடிக்கை; மேலும் 729 பேர் கைது

*நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 729 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதானவர்களில் 710 ஆண்களும் 19 பெண்களும் அடங்குவர். அவர்களில் 09 பேர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் 11 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.*

*சந்தேக நபர்களிடமிருந்து 130 கிராம் ஹெரோயின், 184 கிராம் ஐஸ், 209 கிராம் கஞ்சா ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)*

# மலையக அமைச்சரின் கட்சியும் காணாமல்போக செய்யப்படுமாம்

## உதயகுமார் எம்.பி எச்சரிக்கை

(க.கிஷாந்தன்)

ஏமாற்றுக் காரர்களின் கூடாரமாக இந்த அரசு மாறியுள்ள நிலையில், ஏமாற்றுக் காரர்களின் தலைவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார் என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதயகுமார் தெரிவித்தார்.



தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஹற்றனில் இடம் பெற்றது.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தொழில் அமைச்சராக செயற்பட்ட மனுஷ நாணயக்காரவும் கொட்டகலைக்கு வருகைதந்து 1,700 ரூபா வழங்கப்படும் என உறுதியளித்தனர். மக்களை ஏமாற்றி பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து நாடகங்களையும் அரங்கேற்றினர்.

ஆனால், இது ஏமாற்று நடவடிக்கை என்பது தற்போது உறுதியாகியுள்ளது. சம்பள உயர்வு தொடர்பில் வெளியான வர்த்தமானி அறிவித்தல்கூட மீளப்பெறப்பட்டுள்ளது. இவ்வாறு மலையக மக்களுக்கு துரோகம் செய்ததால்தான் இன்று நாடாளுமன்ற உறுப்புரிமையைக்கூட மனுஷ நாணயக்கார இழந்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வீட்டுக்கு அனுப்பப்படுவார், அதன்பின்னர் பொதுத்தேர்தலில் மலையக அமைச்சரின் கட்சியும் காணாமல்போக செய்யப்படும். தமக்கு துரோகம் இழைந்த இந்த மூன்று தரப்புகளுக்கும் மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள். என்றார். (05)

# மருதமுனை, அக்கரைப்பற்று அணிகள் இடையிலான கால்பந்துபோட்டி சமநிலை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை 40 வயதுக்கு மேற்பட்ட உதைபந்தாட்ட அணிக்கும் அக்கரைப்பற்று 40 வயதுக்கு மேற்பட்ட உதைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ போட்டி ஒன்று மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் பாதி வேளை நிறைவடையும் வரை இரு அணிகளும் எதுவித கோலும் போடாமல் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இடைவேளை நேரம் முடிவடைந்த பின்னர் போட்டி ஆரம்பிக்கப்பட்டு 15 நிமிடங்கள் தாண்டிய போது அக்கரைப்பற்று அணி மருதமுனை அணிக்கு எதிராக தமது முதலாவது கோளை புகுத்த ஐந்து நிமிடங்களின் பின்னர் மருதமுனை அணி அக்கரைப்பற்று அணிக்கு எதிராக ஒரு கோளை புகுத்தியது. இறுதியில் (01:01) என்ற கோள் சமநிலையில் போட்டி நிறைவடைந்தது.

போட்டியின் வீரர்கள் அறிமுக நிகழ்வின் போது மருதமுனை ஆபிதா ஹேண்ட்லூம் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இஸட். என்.சுஹைப் ரூமி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வீரர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தினார்.

மருதமுனை 40 வயதுக்கு மேற்பட்ட அணியினர் போட்டியில் கலந்து கொண்ட பிரதம அதிதி, ஏனைய ஆதரவாளர்கள், உதைபந்தாட்ட ரசிகர்கள், விளையாட்டு வீரர்கள், நடுவர்கள் என அனைவருக்கும் தமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர். (05)



## மலையேறிய சுற்றுலாவி மீது கற்பாறை சரிந்து வீழ்ந்து சாவு

அம்புலுவாவ மலைப்பகுதியில் சுற்றுலாப் பயணம் செல்வதற்கு தவறுதலான பாதையினூடாக மலையேறி சென்றுகொண்டிருந்த நபர்மீதுகற்பாறைசரிந்துவீழ்ந்ததில், அந்த நபர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்குபேர்கொண்டகுழுவினர் மலை ஏறிக்கொண்டிருந்தபோதே, அவர்களில் ஒருவர் கற்பாறை வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்தெஹியோவிட்ட முருத்தெட்டுவே பகுதியைச்சேர்ந்த 37 வயதுடையவர் என்றும் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டபோது, விபத்துக்குள்ளான நபர் மனைவியிடம் கூறாமல் தனது நான்கு நண்பர்களுடன் சுற்றுலா சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## பூநகரியில் கோரவிபத்து யாழ். இளைஞன் இறப்பு

மன்னார் நாவற்குழி ஏ-32வீதியின் பூநகரி பரமன்கிராய் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச்சேர்ந்த 27வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு சென்று விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும்விபத்திற்கானகாரணம் தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05-113)

## தேசியப்பட்டியல் விவகாரம்: நிஸாம் காரியப்பர் அறிக்கை!

(கே எ ஹமீட்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் விவகாரத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. நான் திருமதி ஹிருணிகாவை சிபாரிசு செய்துள்ளேன். இந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் விவகார செய்தி முஸ்லிம் காங்கிரஸ் எதிரியால் பரப்பப்பட்டது அன்பினால் அல்ல.

மாறாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடையே குழப்பத்தை உருவாக்குவதற்காக. ஏன் இரண்டு மாத தேசியப்பட்டியலை எடுக்க வேண்டும் ? ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரத்தை அதிகரிக்க ஹிருணிகா உதவுவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். (05)



# பிரித்தானிய 'எடின்பரோ கோமகன் சர்வதேச விருது வழங்கல் விழா

(எஸ்.அஷ்ரப்கான்)

சாய்ந்தமருது ஜீனியஸ் 7 இளைஞர் விருதுப்பிரிவு ஊடாக கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 36 இளைஞர், யுவதிகள் வெண்கலம் மற்றும் வெள்ளி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், பொத்துவில், மத்தியமுகாம், ஓட்டமாவடி போன்ற பிரதேசத்தை சேர்ந்தவர்களே இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இவ் விருதுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய விருதுப் பிரிவு ஊடக தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான இச் சர்வதேச விருது வழங்கும் விழாவிற்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அதிமேதகு அன்ட்ரூ பெட்ரிக் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர், ரோஹன திஸாநாயக்க ஏற்பாட்டில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்ஃபணிப்பாளர் நாயகமும் தேசிய இளைஞர் விருது தேசிய பணிப்பாளருமான பொறியியலாளர் பசிந்து குணரத்ன தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் 36 இளைஞர், யுவதிகள் 17 வெள்ளி விருதுகளையும் 19 வெங்கல விருதுகளையும் பெறவுள்ளனர்.

இந்த சர்வேதச இளைஞர் விருது வழங்கல் விழாவில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், பிரித்தானிய எடின்பரோ சர்வதேச விருது குழுவினர்கள் மற்றும் வெளிநாட்டு தூதரவளர்களின் பங்கேற்புடன் 2024 ஒகஸ்ட் 12 ஆம் திகதி (திங்கள்) மு.ப 8.30 மணிக்கு 'தலைமைக் காரியாலயம் மஹரக - தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதான கேட்போர் கூடத்தில்' இடம்பெறவுள்ளது.

இந்த விருது 13-24 வயது உட்பட்ட இளைஞர் யுவதிகளின் ஆளுமை, நுண்ணறிவு, வெளிக்கள ஆய்வு, தலைமைத்துவம், ஆற்றல், கல்வி, திறமை, விளையாட்டு ,சர்வதேச தொடர்புகளுடைய இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்படுகின்ற ஒரு சர்வதேச விருதாகும்.

இந்த சர்வதேச விருதின் ஊடாக,

1. உள்நாட்டு அரச பல்கலைகழக அனுமதியின் போது விசேஷட புள்ளிகள் (கல்வியியற் கல்லூரி-பல்கலைகழகம்)

2. தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம்

3. தொழில்முறை மற்றும் நெறிசார் விருத்தி

4. உள மற்றும் உடலியல் விருத்தி

5. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவதற்கான வாய்ப்பைப் பெற முடியும்.

இந்த விருதை பெற்றவுள்ள இளைஞர் யுவதிகளை நெறிப்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்திய முன்னாள் அம்பாறை மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் எடின்பரோ கோமகன் சர்வதேச விருதுன் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் தலைவரும் இளைஞர் செயற்பாட்டாளருமான முஹம்மட் ஸாஜீத் ஸமான் இதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, இவர் தனது 16 வயதிலிருந்து இவ்வாறான பல தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இளைஞர் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன் தலைமைத்துவம்,

இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்,

முயற்சியாண்மை அபிவிருத்தி, சமூக விழிப்புணர்வூட்டல் என்ற பல நிகழ்சியில் கலந்து கொண்டவருமாவார்.

நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரியாக கடமையாற்றுகின்ற இவர்,

கடந்த 2013 தொடக்கம் 2024 வரை இவரது தலைமையில் சிறந்த வழிகாட்டல் ஊடாக கிழக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலான 102க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளை பெற்றுக் கொண்டது ஒரு சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குரு பூஜை நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

சித்தருள்சித்தர் ஸ்ரீசித் தானைக் குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பாக நடைபெற்றது.

நேற்று காலை முதல் பஜனைகூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது.

தொடர்ந்து ஆலய குரு சிவஸ்ரீதியாகராஜ குருக்கள் குருபூஜையை நடத்தினார்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.



முடிவில் பாரிய அன்னதானம் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபைதலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற அப்பாரம்பரிய நிகழ்விற்கு முன்னோடியாக சனிக்கிழமை சித்தர் ஆலயத்தில் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்னதானம் மற்றும் திருவிளக்கு பூஜை என்பன சிறப்பாக நடைபெற்றன.

இன்று (திங்கட்கிழமை) இடும்பன் பூஜையுடன் குருபூஜை நிறைவடையும். (05)

கண்டியில் தேர்தல் காலங்களில் மட்டும்

# தமிழ்ப் பிரதிநிதி புராணம் பாடிவிட்டு காணாமல்போகும் அரசியல்வாதிகள்

## எமது செயற்பாடு அவ்வாறு அமையாது என்கிறார் பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)

'கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், அபிவிருத்தி தேவைப்பாடுகளையும் நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம். மாறாக தேர்தல் காலங்களில் மட்டும் தமிழ்ப் பிரதிநிதி புராணம் பாடிவிட்டு காணாமல்போகும் அரசியல்வாதிகள் போல் எமது செயற்பாடுகள் அமையாது.' என்று இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் கண்டி 'கரலிய' அரங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற தோட்ட தொழிற்சங்கங்களின் இளம் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது பாரத் அருள்சாமி மேலும் கூறியவை வருமாறு -

'அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடன் இக்கூட்டத்தை என்னால் வெற்றிகரமாக ஏற்பாடு செய்ய முடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. எமது கட்சியின் உப செயலாளர் செல்லமுத்து உட்பட ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்;.

இக்கூட்டம் மிகவும் திருப்திகரமாக அமைந்துள்ளது, எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை ஜனாதிபதி ஏற்றுள்ளார், நெருக்கடியான காலகட்டத்தில் சவாலை ஏற்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட இளம் அரசியல் தலைவர்களுடன் இணைந்து ஜனாதிபதி இந்நாட்டை கட்டியெழுப்பியுள்ளார், எனவே, எத்தகைய சவால்களையும் வெற்றிகரமாக சந்திப்பதற்கு இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முதல் மாநாடு கண்டி மாவட்டத்தில் நடைபெற்றிருந்தாலும், காலபோக்கில் வந்த சில அரசியல்வாதிகளால் கண்டி மண்ணில் எம்மால் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாமல்போனது.

இந்நிலைமையை நாம் இன்று சீர்செய்துள்ளோம். கடந்த பொதுத்தேர்தலில் கண்டியில் களமிறங்கிய



எனக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் உட்பட கட்சி செயற்பாட்டாளர்கள் பக்க பலமாக இருந்தனர், இளைஞர்கள் உட்பட மக்களும் ஆதரவு வழங்கினர்.

அதனால்தான் முதல்தடவையிலேயே 25 ஆயிரம் வாக்குகளை வரை பெறமுடிந்தது. அடுத்த முறை நாம் கண்டி மாவட்டத்தில் பிரதிநிதித்துவத்தை பெறுவோம்;. அதற்கு மக்கள் பேராதரவு வழங்குவார்கள்.

கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான அபிவிருத்திகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளோம். அவரும் இதுபற்றி கவனம் செலுத்திவருகின்றார். எனவே, கண்டி மாவட்ட மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளை நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம்.

கல்விக்கு தற்போது நாம் முன்னுரிமை வழங்கிவருவதால் கண்டி மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களும் உள்ளன.

அதேவேளை, பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் சுமூகத்தீர்வு கிட்டும் என நம்புகின்றோம். எதிர்வரும் 12 ஆம் திகதி பேச்சு உள்ளது. இதன்போது இரு தரப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வந்து, இப்பிரச்சினை தீரும் என உறுதியாக நம்புகின்றோம்.

அத்துடன், தேர்தல்காலங்களில் மாத்திரம் கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் பற்றி பேசுபவர்கள், தேர்தலின் பின்னர் மக்களுக்குரிய சேவைகளை உரியவகையில் முன்னெடுப்பதில்லை, இவ்வாறான ஏமாற்று அரசியல்வாதிகளுக்கு மக்கள் தக்கபாடத்தை அடுத்த தேர்தலில் புகட்டுவார்கள். என்றார். (05)

# ஆசிரியையின் பணப்பை திருடி ஏ.டி.எம் ஊடாக பணம் கையாடல்

## சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

ஆசிரியை ஒருவரின் பணப்பையை திருடி பணப்பையில் இருந்த ஏ.டி.எம். அட்டையை பயன்படுத்தி வங்கிக்கணக்கிலிருந்து 20 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிவில் பாதுகாப்பு படையை சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கிராதுருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹாஓயா சிவில் பாதுகாப்பு படை முகாமில் பணிபுரியும் 41 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் புதிய மெதகம, தியவிட்டகம பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

கடந்த ஜூன் மாதம் 01ஆம் திகதி ஹோபரிய பகுதியில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரின் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் இருந்த பணப்பை திருடப்பட்டுள்ளதாக கிராதுருகோட்டை பொலிஸ் நிலையத்தில் அந்த ஆசிரியர் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய, கிராதுருகோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், அப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் சந்தேக நபர் தெஹியத்தகண்டிய நகருக்கு மற்றுமொரு நபருடன் சென்று வங்கிக் கணக்கில் பணம் எடுத்துச் செல்லப்பட்டமை உறுதிபடுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# ரக்டர் – மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; 2 பேர் காயம்



அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டப்பளத்திற்கும் தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்திற்கும் இடையே அமைந்துள்ள அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் ரக்டரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நெல் அறுவடை முன்னாயத்த பணியில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்று சடுதியாக பிரதான வீதியை நோக்கி இரு வழி சாலையை மறித்து திரும்பமுற்பட்ட வேளை மறுமுனையில் இருந்து வேகமாக பயணம் செய்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்து சம்பவத்தில் உழவு இயந்திரத்தை செலுத்திய சாரதி காலில் காயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்களில் ஒருவருக்குகை உடைவுஏற்பட்டுள்ளதாக விபத்தை நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர். அத்துடன் குறித்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர்கள் மற்றும் உழவு இயந்திர சாரதி ஆகியோர் காயமடைந்தநிலையில் அக்கரைப்பற்று பகுதியில் இருந்து வந்த 1990 சுவ செரிய அம்புலன்ஸ் காலதாமதமாக வந்தமையால் திரும்பி சென்றது.

மேலும் இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொது இணக்கப்பாட்டுடன் சமாதானமாக செல்ல முற்பட்ட போதும் சம்பவ இடத்திற்கு வருகைதந்த நிந்தவூர் போக்குவரத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் விபத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2024இல் வெளியிடப்பெற்றது